**செய்தி வெளியீடு எண்:1108** **நாள்:14.11.2021**

## <u>செய்தி வெளியீடு</u>

### எட்டாவது நாளாக மழையால் பாதிக்கப்பட்ட வில்லிவாக்கம், திரு.வி.க.நகர், எழும்பூர் மற்றும் கொளத்தூர் சட்டமன்ற தொகுதிகளுக்கு நேரில் சென்று நிவாரணப் பொருட்களை வழங்கி, கொரோனா தடுப்பூசி முகாம், மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (14.11.2021) எட்டாவது நாளாக தொடர் மழையால் பாதிக்கப்பட்ட வில்லிவாக்கம், திரு.வி.க.நகர், எழும்பூர் மற்றும் கொளத்தூர் சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று, கொரோனா தடுப்பூசி முகாம், மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்களை ஆய்வு செய்து, பொது மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழையையொட்டியும், வங்கக் கடலில் உருவாகிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாகவும் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கனமழையால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 7-ஆம் தேதி முதல் தொடர்ந்து பார்வையிட்டு ஆய்வு செய்து வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக இன்று (14.11.2021) சென்னை வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட லாக்மா நகரில், கொரோனா தடுப்பூசி மற்றும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்தார்.

மழைக்காலத்தில் ஏற்படும் தொற்றுநோய்களிலிருந்து பொது மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 200 வார்டுகளிலும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் மூலமும், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகளின் சார்பில் கூடுதலாக 200 சிறப்பு மருத்துவ முகாம்கள் மூலமும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து, சென்னை, திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சங்கர பக்தன் தெரு, கொன்னூர் நெடுஞ்சாலை ஆகிய பகுதிகளில் மழை நீரினால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

பின்னர், சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மைலப்பா தெரு, நேரு மண்டபப் பகுதியில், மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்து, மழையால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார். மேலும், மாதவரம் நெடுஞ்சாலை கமலாம்பாள் திருமண மண்டபம், வி.வி.நகர் மெயின் ரோடு, மூகாம்பிகை நகர் ஆகிய இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினைப் பார்வையிட்டு பொது மக்களிடம் சிகிச்சைப் பற்றி கேட்டறிந்தார்.

தொடர்ந்து, பெரம்பூர் பல்லவன்சாலை, கே.கே.நகர் அவென்யூ சாலை அருகே மழையால் ஏற்பட்டிருந்த பள்ளத்தை பார்வையிட்டு, ஆய்வு செய்து உடனடியாக சரி செய்வதற்கு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், ஜானகிராம் நகர், ஒற்றைவாடை தெரு, வெற்றி நகர் அய்யாலு தெரு, ராஜா தோட்டம் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு, தான்தோன்றியம்மன் கோவில் தெரு, நாகாத்தம்மன் கோவில் தெரு, ஜி.கே.எம் காலனி 35வது தெரு, லட்சுமி நகர் மெயின் ரோடு, அஞ்சுகம் நகர் முதல் மெயின் ரோடு ஆகிய இடங்களில் நிவாரணப் பொருட்களை வழங்கி. மழையால் பாதிக்கப்பட்ட பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று பாதிப்பின் விபரங்களை கேட்டறிந்தார். மேலும் ஜி.கே.எம் காலனியில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் பார்வையிட்டார்.

சென்னை, 70 அடி சாலை, பேப்பர் மில்ஸ் ரோடு, பெரவள்ளூர் ஆகிய பகுதிகளில் மழை நீர் அகற்றும் பணிகளையும் பார்வையிட்டார்.

தொடர்ந்து, ஜம்புலிங்கம் மெயின் ரோடு, JR திருமண மண்டபத்தில் நபிகள் நாயகம் தெரு, வெற்றி செல்வி அன்பழகன் நகரில் அமைந்துள்ள SIP மெமோரியல்

டிரஸ்ட் காப்பகத்தைச் சேர்ந்த ஆதரவற்ற குழுந்தைகளுக்கு நிவாரண பொருட்களை வழங்கினார்.

பின்னர், சென்னை வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வில்லிவாக்கம், பாரதி நகர் கிழக்கு ஏரிக்கரை தெரு, சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலை, மழையால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கி, ராஜமங்களம் சிக்னல் அருகில் பொதுமக்களை சந்தித்து தேவைகளைக் கேட்டறிந்தார்.

சென்னை எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட டோபிகானா பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு சென்ற இடங்களில் அரசின் சார்பிலும், தொண்டு நிறுவனங்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், உடன் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.தயாநிதிமாறன், திரு.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.அ.வெற்றி அழகன், திரு.தாயகம் கவி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி (வடக்கு) பொறுப்பு அலுவலர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்

............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**